**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள் :*13.08.2024*
பி.வா.சா.*2* – ரேணுகாதேவி க/பெ.முருகன்
*O.S No. 82/2020:*
*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.*)*
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை *:*

நான் *7*ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.*1* கடனுறுதி சீட்டு சாட்சியிடம் காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று சாட்சி மறுக்கிறார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் கணவர் முருகனுக்கும், முத்துக்கிருஷ்ணனுக்கும் இடையே தான் பணம் கொடுக்கல் வாங்கல் இருப்பதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் கணவர் சொக்கிகுளத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளைக்கான எனது கணவருடைய காசோலைகளையும், சொத்துக்கான பத்திரத்தையும் முத்துகிருஷ்ணனிடம் என் கணவர் கொடுத்துள்ளார். என் கணவர் கடனுறுதி சீட்டு எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனக்கும், என் கணவர் முருகனுக்கும், வாதி காளியம்மாளை யாரென்றே தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் *6* வது பத்தியில் வாதியை யாரென்றே தெரியாத நிலையில் பணவசதி கிடையாது என்று எவ்வாறு குறிப்பிட்டுளேன் என்றால் அது தவறாகும். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்திடவில்லை, வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தேன். எனக்கும், வாதிக்கும் நெருங்கிய பழக்க வழக்கம் இருந்து வந்துள்ளது என்றும், அதை அடிப்படையாக கொண்டு கடனாக ரூ.*5,00,000/-* பெற்று அதற்கு ஆதரவாக நானும், என் கணவரும் கடனுறுதி சீட்டை எழுதி வாதியிடம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. முத்துகிருஷ்ணனுக்கும் எனது கணவர் முருகனுக்கும், மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் *1* ல் *STC No.590/2017* வழக்கு நடந்து

முடிந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் *1*ல் *STC No.590/2017* வழக்கில் ரூ.*5,50,000/-*த்தில் ரூ.*3,30,000/-*என்று சமரசம் பேசி முடிக்கப்பட்டு *3* தவணைகளாக ரூ.*70,000/-*மட்டும் செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான். என் கணவர் நிறைய நபர்களிடம் பணத்தை பெற்று மோசடி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார் என்றால் சரியல்ல, வேறு யாரிடம் என் கணவர் பணம் வாங்கியது கிடையாது. வாதியிடம் நானும் எனது கணவரும் அவசர தேவைக்காக கடந்த *20.01.2019* அன்று சில்லறை கடன்களை அடைப்பதற்காக ரூ.*5,00,000/-* ரொக்கமாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்துவிட்டு அதை ஏமாற்றும் நோக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை *:* இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா**
**சார்பு நீதிபதி,**
**மேலூர்**